

திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. மஹாலில் 19.06.2023 அன்று நடைபெற்ற விழாவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு, திண்டுக்கல் மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி ஜோ.இளமதி ஜோதிபிரகாஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் எஸ்.ராஜப்பா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, மண்டல முதுநிலை மேலாளர்(மதுரை) திருமதி ஜெ.பியூலா ஜென் சுசீலா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் திருமதி ம.ரோஸ் பாத்திமா மேரி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அ.நாசருதீன், திண்டுக்கல் மாவட்ட அனைத்து விளையாட்டுக் கழகம் சு.சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.

### முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு

# ரூ.41.58 லட்சம் மதிப்பிலான பரிசுத்தொகை, பாராட்டு ச்சான்றிதழ்!

## அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், ஜுன் 21-

திண்டுக்கல் மாவட்ட அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 1737 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.41.58 லட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை, அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் திண்டுக்கல் மாவட்ட அளவில் நடைபெற்றது. இதற்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி, மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ் ,மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் இ. பெரியசாமி போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .குறிப்பாகமாணவ - மாணவிகளின் கல்வி தரத்தை உயர்த்துவது மட்டுமின்றி அவர்களை விளையாட்டு துறையில் சாதனை படைக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்து வருகிறார். தமிழக அரசு வேலைவாய்ப்பில் விளையாட்டு வீரர்களுக்கு மூன்று சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அதேபோல் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு களுக்கான பரிசுத்தொகை 1000 ஆயிரத்திலிருந்து ரூ. 3000மாக ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விளையாட் டில் திறமையாக இருந்தால் அனைத்து வாய்ப்புகளும் நம்மை தேடி வரும்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் 2022 23, மாநிலம் முழுவதும் மாவட்டம் மண்டல அளவில் போட்டிகள் நடைபெற்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூ. 3000 இரண்டாம் பரிசு ரூ.2000 மற்றும் மூன்றாம் பரிசு ரூபாய் ரூ.1000 வீதம் 1737 வீரர்களுக்கு ரூ.41.58 மதிப்பு உள்ள பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் விளையாட்டு துறையில் சிறந்த மாவட்டமாக தொடர்ந்து விளங்கி வருகிறது. மாநில அளவில் அருமையான விளையாட்டு வீரர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் உருவாகி உள்ளனர். அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்தால் உலக அளவில் பிரகாசிப்பார்கள்.

விளையாட்டு துறையில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற தமிழ்நாடு முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முக்கியத்துவம் கொடுத்து அதை செயல்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் இ. பெரியசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் ரோஸ்மேரி பாத்திமா, கழக மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன், பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகரச் செயலாளர் ராஜப்பா, ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை பகுதி செயலாளர்கள் ஆனந்த், ஜானகிராமன், ராஜேந்திரகுமார், சந்திரசேகரன் மாநகர பொதுச்செயலாளர் அழகர்சாமி,பொருளாளர் சரவணன் விவசாய அணி கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், மாவட்ட கால்பந்து கழக செயலாளர் சண்முகம், ஆக்கி சங்கத் தலைவர் நாட்டாண்மை காஜா மைதீன் உட்பட பலர் கலந்து



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மதுரை மண்டல சார்பதிவாளர்கள் சீராய்வுக் கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, துணை பதிவுத்துறை தலைவர் ரவீந்திரநாத், உதவி பதிவுத்துறை தலைவர் ராஜ்குமார் மற்றும் மதுரை, திண்டுக்கல், பழனி மற்றும் பெரியகுளம் சரக சார்பதிவாளர்கள் கலந்து கொண்டனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனு ஆதி
### ஜுன் 21 (2005)



தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### திருக்கோயில்களில் இனிமேல் யானைகள் வாங்கக்கூடாது என்ற

# தனி நீதிபதியின் உத்தரவுக்கு தடை!

## தமிழ்நாடு அரசின் மேல்முறையீட்டில் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜுன் 21-

திருக்கோயில்களில் இனிமேல் யானைகள் வாங்கக் கூடாது என அனைத்து திருக்கோயில்களுக்கும் அறிவுறுத்தும்படி அறநிலையத்துறை அரசு செயலருக்கு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களால் 27.02.2023 அன்று உத்தரவிடப் பட்டது.

அதனை எதிர்த்து தமிழ்நாடு அரசால் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இம்மனு நேற்று முன்தினம் (19.06.2023) சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் திருமதி விக்டோரியா கௌரி ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றதில் தனி நீதிபதி உத்தரவிற்கு இடைக்காலத் தடை வழங்கி உத்தரவிடப் பட்டுள்ளது.



கடலூர் மாவட்டம், பட்டாம்பாக்கம் கிராமத்தில் 19.06.2023, காலை, இரண்டு தனியார் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்த நிலையில் காயமடைந்த பலர் கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றனர். இதனை அடுத்து உயிரிழந்த நான்கு பேர் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சமும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரமும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25 ஆயிரமும் அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இந்நிலையில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மருத்துவமனைக்கு நேரில் சென்று உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலித்தினர். பின்னர் அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினர். கடலூர் மாவட்ட ஆட்சியர் அ.அருண் தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கடலூர் மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### நெல்லை மத்திய மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

# வட்டம் - ஊராட்சிகள் தோறும் கழகக் கொடியேற்று விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.ஜுன் 21-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு 55 வட்ட கழகங்களிலும், மானூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட 42 ஊராட்சிகளிலும் தலா 2 புதிய கொடிக் கம்பங்களும், 2 பேரூராட்சிகளில் தலா 5 கொடிக்கம்பங்களும் கல்வெட்டுடன் அமைத்து கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்று முடிந்த மாவட்டக் கழக,மாநகர கழக, ஒன்றியக் கழக மற்றும் பேரூர்க் கழக செயல் வீரர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட 55 வட்டக் கழகங்களிலும், அதேபோல் மானூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 42 ஊராட்சிகளில் தலா 2 புதிய கொடிக் கம்பங்களையும் மற்றும் சங்கர் நகர்,நாரணம்மாள்புரம்,பேரூர் கழகங்களில் தலா 5 புதிய கொடிக்கம்பங்களையும் உருவாக்கி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கல்வெட்டுடன் கூடிய கொடிக்கம்பமாக ஏற்பாடு செய்திட வேண்டும்.

அதேபோல் அந்தந்த பகுதியில் உள்ள ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களையும் வழங்கிடவும்,இந்த ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக இந்நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட மாநகரம்,பகுதி கழகங்கள், ஒன்றிய கழகங்கள் மற்றும் பேரூர் கழகங்கள் அதன் விவரங்களை மாவட்ட கழகத்தில் தெரியப்படுத்திட வேண்டுவதோடு, மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழகத் தோழர்கள் சமூக வலைத்தளங்களில் உள்கட்சி பிரச்சனைகள் குறித்து கருத்துக்களை பதிவிடாமல் தவிர்த்திடவும்,நம் எதிரியார் என்று நம் அன்பு தலைவர் குறிப்பிட்டு காட்டியபடி நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிரியை வீழ்த்தி கடமைகண்ணியம்கட்டுப்பாடு காத்து கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க கழகத் தோழர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பூண்டி கலைவாணன் தலைமையில்

# திருவாரூர் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## கொட்டும் மழையிலும் நள்ளிரவில் திரண்ட மக்கள் வெள்ளம்!

திருவாரூர், ஜுன் 21.

திருவாரூர் மாவட்டத்திற்கு வந்திருந்த தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நள்ளிரவில் திருவாரூர் கீழவீதியில் திரண்டுநின்று பூண்டி கே. கலைவாணன் தலைமையில் பிரமாண்ட வரவேற்பளித்தனர்.மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றனர் .

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் கோட்டம்" திறப்புவிழாவிற்கும் அரசின் நலத்திட்டங்களின் ஆய்வுகளுக்காகவும் திருவாரூர் வந்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 18.06.2023நள்ளிரவு திருவாரூர் வந்தடைந்தார். அப்போது மண்ணின் மைந்தரை வரவேற்க திருவாரூர் கீழவீதியில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் ஏராளமானோர் திரண்டு நின்று வாழ்த்து முழக்கமிட்டு வரவேற்றனர். அனைவரின் வரவேற்பையும் தனது பயணக்களைப்பையும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்களின் அன்பு மழையில் நனைந்து முதலவர் முக.ஸ்டாலின் வரவேற்பினை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (19.06.2023) காலை கீழவீதியில்உள்ள தனது இல்லத்தில் இருந்து புறப்பட்ட முதல்வர் முக. ஸ்டாலின் வாயிலில் திரண்டிருந்த மக்களை சந்தித்து பேசியதோடு, மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.பின்னர் கலைஞர் அவர்களின் தாயார் நினைவிடத்தின் வழியே பயணித்து காட்டூர் கலைஞர் கோட்டத்தின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அடுத்து அங்கு நடைபெற இருக்கும் பொதுக்கூட்ட அரங்கை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வரின் இந்த பயணத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, டி.ஆர்.பி. ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி. கலைவாணன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ. கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் - தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியப் பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, நாகை அ.அசோகன், நாகை இல. மேகநாதன், எஸ்.கே.வேதரத்தினம், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜுன் 21 (2009)



தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.